# கிராமிய சேவைத் திட்டம்

ஒசூர் மண்டலம்
பாரதிபுரம் அறிவுதிருக்கோயில்
செட்ரப்பட்டி கிராமம்




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# ஒசூர் மண்டலம்
# பாரதிபுரம் அறிவுதிருக்கோயில்
# செட்ரப்பட்டி கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை ........ 3
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் ........ 4
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் ........ 4
4. செட்ரப்பட்டி கிராமத்தின் தொடக்கவிழா ........ 5
5. மருத்துவ முகாம் ........ 7
6. மனநல ஆலோசனை முகாம் ........ 7
7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல் ........ 7
8. உலக நல வேள்வி தினம் ........ 8
9. அகத்தாய்வு பயிற்சி 1,2 மற்றும் 3 ........ 8
10. பிரம்மஞானம் & ஆசிரியர் பயிற்சி ........ 8
11. அனுபவ உரை ........ 9
12. எதிர்காலத் திட்டங்கள்: ........ 16
13. வாழ்த்து: ........ 16

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | செட்ரப்பட்டி | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **26-07-2024** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **06-04-2025** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **8** மாதங்கள் | | |
| 5. | மண்டலம் | ஒசூர் | | |
| 6. | அறக்கட்டளை | பாரதிபுரம் அறிவுதிருக்கோயில் | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | *Mother India Forms* | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ஆண்:*1100* | பெண்:*1050* | மொ:*2150* |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ஆண்:*380* | பெண்:*630* | மொ:*1010* |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ஆண்:*377* | பெண்:*627* | மொ:*1004* |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ஆண்:*353* | பெண்:*605* | மொ:*958* |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:*125* | பெண்:*265* | மொ:*390* |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:*112* | பெண்:*237* | மொ:*349* |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:*98* | பெண்:*205* | மொ:*303* |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:*57* | பெண்:*144* | மொ:*201* |
| 16. | ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:*05* | பெண்:*09* | மொ:*14* |
| 17. | துணைப்பேராசிரியர் பயிற்சி | ஆண்:*04* | பெண்:*07* | மொ:*11* |
| 18. | உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students below 14)* | ஆண்:*14* | பெண்:*23* | மொ:*37* |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் **377**-வது கிராமமாக செட்ரப்பட்டி கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் **26-07-2024**-ஆம் தேதியிலிருந்து **06-04-2025**-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. செட்ரப்பட்டி கிராமத்தின் தொடக்கவிழா

*Mother India Forms நிதி உதவியுடன் ஒசூர் மண்டலம், பாரதிபுறம் அறிவுத்திருக்கோவில் சார்பாக 26-07-2024-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.* **SKM.** *மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் செட்ரப்பட்டி கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*














உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி











## 5. மருத்துவ முகாம்

*16.10.2024 அன்று செட்ரப்பட்டி கிராமத்தில் Vivekanantha Medical Hospital & Research Institute மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-90, பெண்கள்-145, மொத்தம்-235 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*





## 6. மனநல ஆலோசனை முகாம்

*17.11.2024 அன்று Dr.Ramesh அவர்களால் செட்ரப்பட்டி கிராமத்தில் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் ஆண்கள்-23, பெண்கள்-35, மொத்தம் 58 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 14 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*





## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல்

*01.01.2025 அன்று செட்ரப்பட்டி கிராமத்தில் மண்டல மற்றும் அறக்கட்டளை பொறுப்பாளர்கள் கிராம மக்களுக்கு 110 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*





## 8. உலக நல வேள்வி தினம்

01.01.2025 அன்று செட்ரப்பட்டி கிராமத்தில் உலக நல வேள்வி தினம் நடத்தப்பட்டது. இதில் கிராம மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





## 9. அகத்தாய்வு பயிற்சி 1,2 மற்றும் 3

அகத்தாய்வு 1 11,12/08/24, அகத்தாய்வு 2 16,17/08/24, அகத்தாய்வு 3 23,24/08/24 ஆகிய தேதிகள் நடைபெற்றது.





## 10. பிரம்மஞானம் & ஆசிரியர் பயிற்சி






11.அனுபவ உரை

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | Around 96% of the participants are able to remember things |
| 2 | 95% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 3 | 93% of the participants are out of the depression compared to before joining the program |
| 4 | 93% of the participants are able to control their anger |
| 5 | 93% of the participants mental health has calmed due to the SKY Meditation |
| 6 | 93% of the participants are able to eradicate worries and maintain a healthy life |
| 7 | Around 83% (893) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation-350 participants cured of Joint Pain, 250 participants cured of Migraine and Headache, 215 participants cured of Blood pressure, 133 participants cured of Asthma and Breathing Problem, 117 participants cure of Cholesterol, 115 women participants cured of menstrual Problem (PCOD). |
| 9 | **Around 96% of the participants are happy with the VSP Programme compared to only 45% before joining the program** |

## Feedback Trend





வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குருவே துணை.

என் பெயர் பாரதி சின்ராசு, என் வயது 49 நான் செட்ரப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன்.

எங்கள் ஊரில் மதர் இந்தியா பண்ணை நிறுவனர் திரு அரங்க துரைராஜ் அவர்கள் இலவச மனவளக்கலை பயிற்சியை கொண்டு வந்தார்கள்.

யோகா பயிற்சியில் கலந்து கொண்டேன். உடற்பயிற்சி செய்து உடல் நலம் பெற்றேன். தவத்தின் மூலம் உயிரை உணர்ந்தேன். தவத்தின் பயனாக சிந்தனையும், தெளிவும் கூடுகிறது என்பதை உணர்ந்தேன்.

காயகல்ப பயிற்சியின் மூலமாக உயிராற்றல் கெட்டிபடுவதை உணர்ந்து தொடர்ந்து காயகல்ப பயிற்சி செய்து வருகிறேன்.

அகத்தாய்வு பயிற்சி மூலமாக நல்ல எண்ணங்களும், உயர்வான பண்புகளும் ஓங்கின.

"மலரே நீர் யார் என கேட்டேன்.
மறை பொருளை தெய்வம் நான்.
சிலரே அறிவார் இவ்வுண்மை
சிந்தனை செய்ய வல்லவர்கள்,"

என்னை மிகவும் கவர்ந்த வரிகள். மகரிஷிக்கு நன்றி.

தொண்டாற்றி இன்பம் காண்போம்.

C. Bharathi.



வாழ்க வளமுடன்

குருவே துணை

அனைவருக்கும் வாழ்க வளமுடன்,

என் பெயர் வானிலா என் வயது 53
நான் செட்ரப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன்.
எனக்கு நரம்பு சம்பந்தபட்ட பிரச்சனை, கால்வலி, கைவலி
தூசு அலர்ஜி, தூக்கமின்மை போன்ற பல பிரச்சனை இருந்தது.
இந்நிலையில் எங்கள் ஊரில் கிராமிய சேவை திட்டம் தொடங்கியது
அது எங்க வீட்டு முன்பே 30 அன்பர்கள் கலந்து கொண்டார்கள்
இந்த யோகா பயிற்சியில் எளிய முறை உடற்பயிற்சி, யோகா தவ பயிற்சி, அகத்தாய்வு பயிற்சிகள்
காயகல்பம், குண்டலி யோகா தவ பயிற்சி, அகத்தாய்வு பயிற்சிகள்
காயகல்பம், குண்டலி யோகா கற்று கொடுத்தார்கள்.
மிகவும் எளிமையாக கற்று கொடுத்தார்கள்.
மனவளக்கலை பயிற்சியை தினமும் செய்து வந்தேன்
கை, கால் வலி பிரச்சனை சரியானது. தொடர்ந்து காயகல்ப பயிற்சி செய்து வந்தேன் எனக்கு நரம்பு சம்பந்தமான
பிரச்சனை தொடர்ந்து குறைவதை உணர்ந்தேன்.
தொடர்ந்து 15 வருடமாக தூசு அலர்ஜிக்கு SPRAY
பயன் படுத்தி வந்தேன். மூச்சுபயிற்சி, கபாலபதி பயிற்சி
இரண்டு வேளையும் செய்து வந்தேன். சற்று குறைந்துள்ளது.
பிரம்ம ஞான பயிற்சிக்கு ஆழியார் வந்தேன். ஆழியார்
சூழ்நிலை, மணிமண்டபம் தவம் எனக்கு மிகுந்த மன அமைதி தந்தது.
மனவளக்கலை பயிற்சியை எளிய முறையில் தந்த
"மகரிஷி"க்கு நன்றி. எங்கள் ஊருக்கு இலவசமாக தந்த
மதர் இந்தியா பண்ணை உரிமையாளரும், ஆழியார்
அறங்காவலர் திரு அரங்க துரைராஜ் அய்யாவிற்கு நன்றிகள்



குருவே துணை

வாழ்க வளமுடன்

என்னுடைய பெயர் : பா. பாக்யராஜ் ITI முடித்துள்ளேன். என் வயது 45. நான் விவசாயத் தொழில் செய்து வருகிறேன்.

எனக்கு கால்வலிப் பிரச்சனை சிறிது காலமாக இருந்தது. அதனால் இரவில் உறங்குவதற்கு சிரமமாக இருந்தது. எங்கள் ஊரில் கிராமிய சேவை திட்டத்தின் மூலமாக இலவச உடற்பயிற்சி தவப்பயிற்சி காயகல்ப பயிற்சி அகத்தாய்வு வகுப்புகள் ஜீவகாந்த பெருக்கப் பயிற்சி மதர் இந்திய பண்ணை நிறுவனரால் இலவசமாக எங்கள் ஊருக்கு கொண்டுவந்தார்கள்.

நான் அந்தப் பயிற்சியில் கலந்துக்கொண்டேன். எனது மனைவி குழந்தைகளும் மனவளக்கலை பயிற்சியில் கலந்துக்கொண்டார்கள் கால் பயிற்சி மற்றும் ஆய்வு தரும் பயிற்சி தொடர்ந்து செய்ததால் எனக்கு ஆழ்ந்த அமைதியுடன் உறக்கம் வந்தது. நான் அடியார் சென்றேன். இறைவனைப் பற்றிய தெளிவான விளக்கம் எனக்கு கிடைத்தது. பிறகு என் மனைவியும் என்னுடைய ஒன்பதாம் வகுப்பு பயிலும் மகனும் [பா. கிருத்திகன்] அவர்களும் அடியார் சென்று வந்தார்கள்.

நான் மற்றும் என் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மனவளக்கலைப் பயிற்சியில் வாழ்நாள் முழுமையும் செய்வோம். எங்கள் குடும்பம் ஆரோக்கியமான அமைதியான குடும்பமாக மாற்றிய மனவளக்கலைப் பயிற்சிக்கு நன்றிகள்.

மனவளக்கலைப் பயிற்சியைத்தந்த மகரிஷிக்கு நன்றி. எங்கள் ஊருக்கு இலவசமாக கொண்டுவந்த திரு. அரங்க துரைராஜ், திருமதி. இராஜேஸ்வரி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். பயிற்சியை கற்றுத்தந்த பேராசிய பெருமக்களுக்கும் நன்றி ... இன்பம் காண்போம். B. Bhagy...



வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

வணக்கம்

இளமதி w/o ஆனந்தன் வயது 48 செவரப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறோம்.

எங்கள் ஊரில் மதர் இந்திய மண்ணை நிறுவனர் திரு. அரங்க துரைராஜ் திருமதி ராஜேஸ்வரி அவர்கள் கிராமிய சேவைத்திட்டத்தின் மூலமாக இலவச மனவளக்கலை யோகா பயிற்சி கொண்டு வந்தார்கள்.

எளியமுறை உடற்பயிற்சி உயிர்க்காண காயகல்ப பயிற்சி மனஅமைதிக்கு தவப்பயிற்சி கற்று கொடுத்தார்கள் அகத்தாய்வு வகுப்புகளும் நடத்தினார்கள் அந்த பயிற்சி நானும் கற்றுக்கொண் -டேன்.

ஜீவகாந்த பெருக்கப் பயிற்சிகள் கற்று தந்தார்கள்.

தினந்தோறும் மனவளக்கலை பயிற்சி களை செய்து வந்தேன். மன அமைதியும் நிம்மதியும் கிடைத்தது. எங்கள் ஊரில் உள்ள மக்கள் வந்து கொண்டு பயிற்சியை சிறப்பு செய்தார்கள்.

மனவளக்கலை பயிற்சியை கொண்டு வந்த மகரிஷி மனமார்ந்த நன்றிகள். எங்களுக்கு இலவசமாக தந்த மதர் இந்திய நிறுவனத்திற்கு நன்றி.

வாழ்க வளமுடன்

A. Elamathi

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குரு வாழ்க



அன்பர்கள் அனைவருக்கும் வாழ்க வளமுடன்.

A. கோபால் 45 வயது. நான் செட்ரப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் மதுப்பழக்கம் இருந்தது. இதனால் குடும்பத்தில் பல பிரச்சனைகள் இருந்தது.

எங்கள் ஊரில் இலவச மனவளக்கலை யோகா மகா இந்திய பண்ணை நிறுவனரும் ஆழியார் அறங்காவலருமான திரு. அரங்க துரைராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

மனவளக்கலை பயிற்சியில் நானும் கலந்துக்கொண்டேன். எளிய முறை உடற்பயிற்சி கற்றுக்கொண்டு தினமும் செய்துவந்தேன். என் உடலில் மாற்றம் ஏற்பட்டதை நான் உணர்ந்தேன்.

குண்டலினி யோக தவப்பயிற்சிகள் கற்றுத்தந்தார்கள். ஆக்கினை தீட்சை வாங்கிய உடன் சாந்தி யோகம் வாங்கும்வரை மது அருந்தக்கூடாது என்று கூறினார்கள். நானும் மூன்று தினங்கள் மட்டும்தானே என்று நினைத்து மது அருந்துவதை நிறுத்தினேன்.

தினமும் உடற்பயிற்சி தவப்பயிற்சி காயகல்ப பயிற்சி அகத்தாய்வு வகுப்புகளில் கலந்துக்கொண்டதன் மூலமாக மது அருந்தும் எண்ணமே வரவில்லை. இதனால் என் குடும்ப உறுப்பினர்கள் என் சுற்றத்தார்கள் மிகுந்த மனமகிழ்ச்சி அடைந்தார்கள். பிரம்ம ஞான வகுப்பிற்காக ஆழியார் சென்றேன் மணிமண்டப தவம் என்னை என் வாழ்நாள் இறுதிவரை மதுப் பழக்கத்தை தொடவே மாட்டேன் என்ற வாக்குறுதியை அளிக்கிறேன்.



வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்

வணக்கம் :-

என் பெயர் எழிலரசி அருண் செட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். என்னுடைய வயது 28. நான் முதுநிலை பட்டதாரி. பயின்றுள்ளேன்

குழந்தை பேற்றுக்கு பிறகு தூக்கமின்மை எனக்கு மிகப்பெரிய பிரச்சனையாக இருந்தது. அப்பொழுது எங்கள் ஊரில் மனவளக்கலை யோகா பயிற்சி ஆரம்பமானது. முதலில் பெரிதும் ஈடுபாடில்லாமல் தான் பயிற்சி ஆரம்பித்தேன். பிறகுதான் புரிந்தது. உண்மையில் உடலில் ஏற்படும் வலி, தூக்கமின்மை முதலிய பிரச்சனைகள் தீர்ந்தது.

முக்கியமாக காயகல்பம் செய்ததன் விளைவாக நீண்ட காலமாக இருந்து வந்த மாதவிடாய் பிரச்சனை தீர்ந்தது. எங்கள் குடும்பத்தில் அனைவரும் இம் மனவளக்கலையில் ஈடுபட்டு பயிற்சி பெற்று நலன் அடைந்தோம். என் மூன்றரை வயது குழந்தை ரியா அருண் வேதாத்திரி மகரிஷி ஐயா படத்தை பார்த்து வாழ்க வளமுடன் என்று இருகை கூப்பி பார்க்கும்பொழுது மிக்க மகிழ்ச்சி.

இக்கிராமத்தில் மனவளக்கலை தொண்டு வர காரணமாக இருந்த மதன் இந்தியா பார்ம் நிறுவனர் சுந்தரராஜ் ஐயா அவர்களுக்கு நன்றி!

எங்களுக்கு பயிற்சி அளித்த பஞ்சவர்ணம் அம்மா அண்ணாதுரை ஐயா அவர்களுக்கு மிக்க நன்றி!

## 12. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க செட்ரப்பட்டி கிராமம், பாரதிபுரம் அறிவுத்திருக்கோயில் மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 13. வாழ்த்து:

செட்ரப்பட்டி கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய *Mother India Forms*-க்கும், இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த ஒசூர் மண்டல பொறுப்பாளர்களுக்கும், பாரதிபுரம் அறிவுத்திருக்கோயில் பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடக்கிக்கொடுக்க மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் *Prof.G.Annadurai & Asst.Prof.P.Panchavarnam* அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய *VSP* நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை
உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.
உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே
உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.

-வேதாத்திரி மகரிஷி

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
*WCSC-VSP* இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்